025

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

ஆசிரியர் கல்வியில் முதுகலைமாணி நிகழ்ச்சித்திட்டம்

இறுதிப் பரீட்சை – 2008 (கல்வித்தவணை II)

**ESP 1262/ESP 2252 – ஆசிரியர் கல்வி நோக்குகள்**

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

---

திகதி: 06.12.2008 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

---

மூன்று(03) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

01. "தொடக்கநிலை ஆசிரியர் கல்வி மற்றும் தொடருறு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் ஆசிரியர்கள் வாண்மைத் தேர்ச்சிகள் மற்றும் சுய நம்பிக்கையை கட்டி எழுப்புவதிலும் பேணுவதிலும் ஆசிரியர் கல்வி முக்கிய பங்குவகிக்கிறது."

(i) ஓர் ஆசிரியருக்கு இருக்க வேண்டிய ஐந்து(05) முக்கிய வாண்மைத் தேர்ச்சிகளை குறிப்பிடுக. (15 புள்ளிகள்)

(ii) இலங்கையில் ஏதேனும் ஓர் ஆசிரியர் கல்வி நிறுவனம் நடத்துகின்ற ஒரு தொடக்கநிலை அல்லது சேவைக்கால ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தை தெரிவு செய்க.

(iii) நீங்கள் மேலே குறிப்பிட்ட ஆசிரியர் வாண்மைத் தேர்ச்சிகளை விருத்தி செய்து பேணுவதில் மேற்படி நிகழ்ச்சித்திட்டம் எவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது என்பதை ஆராய்க. (18 புள்ளிகள்)

02. ஆசிரியர்களை வாண்மையினராக ஏற்றுக்கொள்ள வேண்டுமெனில் பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென ஹார்கிறீவ்ஸ் (Hargreaves, 2000) குறிப்பிடுகிறார்:

(i) தொழிலில் நுழைவதற்குக் கட்டுப்பாடுகள்
(ii) குறிப்பான அறிவுத் தளம்
(iii) தொழிலை செய்வதற்கான நிபந்தனைகள்
(iv) சேவை தொடர்பான நிபந்தனைகள்

மேற்படி நிபந்தனைகள் இலங்கையில் ஆசிரியர் தொழிலில் பிரதிபலிக்கின்றனவா என்பதை ஆராய்க.

(8 × 4 = 32 + 01 = 33 புள்ளிகள்)

03. ஆசிரியர்களை பாடசாலைகளுக்கு நியமித்தல் மற்றும் இடமாற்றுதல் தொடர்பான நியாயமின்மைகள் மற்றும் அநீதி சார்ந்த புலக்காட்சிகள் ஆகியவற்றை வெறுமனே ஒழுங்கு விதிகளினால் மற்றும் தீர்த்திவிட முடியாது; மாறாக அவ்வொழுங்கு விதிகள் அமுல்படுத்தப்படுவதனால் மட்டுமே அவை நீக்கப்பட முடியும்."

ம.ப.பா.

(i) ஆசிரியர்களைப் பாடசாலைக்கு நியமித்தல் மற்றும் இடமாற்றுதல் தொடர்பான நியாயமின்மைகள் மற்றும் அநீதி சார்ந்த புலக்காட்சிகளை ஆராய்க. (10 புள்ளிகள்)

(ii) மேற்படி நியாயமின்மைகளும் அநீதிசார் புலக்காட்சிகளும் எவ்வாறு இலங்கையில் கல்வியின் தரத்தைப் பாதிக்கின்றன? (11 புள்ளிகள்)

(iii) தற்போதைய இலங்கையின் சூழமைவில் மேற்படி பிரச்சினையினைத் தீர்க்க உங்களது முன் மொழிவுகளைத் தருக. (12 புள்ளிகள்)

04. (i) ஆசிரியர் கல்வியில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய சிறந்த கணிப்பீட்டு நடைமுறைகள் சார்ந்த ஐந்து(05) கோட்பாடுகளை குறிப்பிடுக. (15 புள்ளிகள்)

(ii) ஓர் ஆசிரியர் கல்வி நிறுவனத்தை தெரிவு செய்து இந்த கோட்பாடுகள் அந்த நிறுவனத்தில் எந்தளவுக்கு நடை முறைப்படுத்தப்படுகின்றன என்பதை ஆராய்க. (18 புள்ளிகள்)

05. (i) இலங்கையில் ஆசிரியர்களுக்கான தொழில்சார் ஒழுக்கக் கோவையை அறிமுகப்படுத்துவதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

(ii) அவ்வாறான ஒரு ஒழுக்கக்கோவையை தயாரிக்கும் போது கருத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய அம்சங்களை விளக்குக. (10 புள்ளிகள்)

(iii) இலங்கையில் ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களின் கலைத்திட்டத்தில் விழுமியக்கல்வியை அறிமுகப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை ஆராய்க (13 புள்ளிகள்)

06. பின்வருவன பற்றி உங்களது கருத்துக்களைத் தருக.

(i) இலங்கையில் ஆசிரியர்களின் வாண்மைவிருத்தியில் ஆசிரியர் தொழிற் சங்கங்களின் வகிபங்கு (11 புள்ளிகள்)

(ii) ஒரு சமூகத்தில் தனியாட்களின் விருத்தியை நோக்கமாக கொண்டுள்ள கல்வியின் செயற்பாடுகள். (11 புள்ளிகள்)

(iii) ஆசிரியர்களில் பிரதிபலிப்பு சிந்திப்பு(Reflective thinking)யை விருத்தி செய்வதன் முக்கியத்துவ்ம் (11 புள்ளிகள்)

(பதிப்புரிமையுடையது)